உபுல் கித்சிறி அவர்களினால் கேட்கப்பட்ட வினா

வினாக்கள்

509/2025

கௌரவ உபுல் கித்சிறி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தை அண்மித்ததாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வளவை கங்கைக்குக் குறுக்காக லியன்கஸ்தொட்ட பாலம் நிர்மாணிக்கப் பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பாலத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் நிறைவுசெய்யப்படவிருந்த திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பாலத்திற்கான மதிப்பீட்டுப் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iv) அப்போது குறித்த பாலத்தை நிர்மாணிப்பதற்குப் பொறுப்பாக செயற்பட்ட அமைச்சு/நிறுவனம் யாது என்பதையும்;

(v) பாலம் நிர்மாணிக்கப்பட்ட காலப்பகுதியில் குறித்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் யாரென்பதையும்;

(vi) இன்றளவில் மேற்படி பாலத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளனவா என்பதையும்;

(vii) மேற்படி பாலத்தின் நிர்மாணப்பணிகள் இடைநிறுத்தப்பட்டிருப்பின், அதன் காரணமாக நாசமடைந்துள்ள பொருட்கள் யாவை என்பதையும்;

(viii) அவற்றின் பெறுமதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

அமைச்சு	: போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள்
கேட்டவர்	: உபுல் கித்சிறி
அரசியற் கட்சி	: தேசிய மக்கள் சக்தி